මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: BD/NSLE/103/DMD/09/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025-12-05

**வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 08 /2025**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செளலாளர்கள்
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களினை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலை காரணமாக 2025-11-28 ஆந் திகதிய 2464/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இலங்கையில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அனர்த்த சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையினை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு துரிதமான நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இவ்வாறு அனர்த்த சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்கள் பின்வருமாறு.

| தொடர் இல. | நிவாரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| 1 | அனர்த்த நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளை புனரமைத்து மீண்டும் பாதுகாப்பாக வாழ்வதற்கு வீட்டு உரிமையினைப் பார்க்காது வீடொன்றுக்கு ஒரு தடவை மாத்திரம் வழங்கும் கொடுப்பனவு | வீடொன்றுக்கு ரூபா 25,000/- |
| 2 | குடியிருப்பதற்கு தேவையான அத்தியவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வீடொன்றுக்கு ஒரு தடவை மாத்திரம் வழங்கும் கொடுப்பனவு | வீடொன்றுக்கு ரூபா 50,000/- |
| 3 | தமது வாழ்வாதாரத்தினை இழந்த குடும்பத்தினருக்கு 03 மாதங்களுக்கு 2025 திசெம்பர் மற்றும் 2026 சனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு | உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 அல்லது அதற்குக் குறைந்த குடும்பங்களுக்கு ரூபா 25,000/-<br><br>உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 இற்கு அதிகமான குடும்பங்களுக்கு ரூபா 50,000/- |
| 4 | அனர்த்தத்தினால் வீடுகளை இழந்து வாழ்வதற்கான வீடற்றவர்களுக்கு மாதாந்த வீட்டு வாடகைக் கொடுப்பனவு | ஆகக் கூடியது 06 மாதம்வரை மாதம் ரூபா 25,000/- |

| தொடர் இல. | நிவாரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| 5 | அனர்த்தத்தினால் பாதிப்புற்ற நெல், தானியங்கள், சோளம் மற்றும் களப்பயிர் பயிர் நிலங்களின் அழிவு அல்லது மீளப் பயிர்ச் செய்கைக்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபா 150,000/- |
| 6 | அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மரக்கறி பயிர் நிலங்களின் அழிவு அல்லது மீளப் பயிர்ச் செய்கைக்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபா 200,000/- |
| 7 | அனர்த்தத்தினால் பாதிப்புற்ற கால்நடை பராமரிப்புப் பண்ணைகளுக்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு (பதிவு செய்யப்பட்ட பண்ணை உரிமையாளர்களுக்கு மாத்திரம்) | பண்ணை உரிமையாளர் ஒருவருக்கு ரூபா 200,000/- |
| 8 | தனியார், சிறிய மற்றும் நுண்நிதி தொழில் முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | அலகொன்றுக்கு ரூபா 200,000/- |
| 9 | அனர்த்தத்தினால் சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்காக நட்ட ஈடு வழங்கல் | படகு ஒன்றுக்காக ஆகக்கூடியது ரூபா 400,000/- வரை |
| 10 | அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் மற்றும் ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | பாடசாலை மாணவர் ஒருவருக்கு ரூபா 15,000/- |
| 11 | அனர்த்தத்தினால் சேதமடைந்த வணிக கட்டிடங்களுக்கு நட்ட ஈடு வழங்கல் | கட்டிடமொன்றுக்கு ஆகக் கூடியது ரூபா 5,000,000/- வரை நட்டஈடு (சேத மதிப்பீன்படி) |
| 12 | அனர்த்தத்தினால் முழுமையாகச் சேதமடைந்த, குடியிருப்பதற்கு முடியாத வீடுகளுக்கு புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்காக கொடுப்பனவு வழங்கல் | வீடொன்றுக்கு ரூபா 5,000,000/- |
| 13 | அனர்த்தத்தினால் குடியிருந்த வீடு முழுமையாக சேதமடைந்து புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தினால் காணி வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் பொருத்தமான காணி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு | வீடொன்றுக்கு ஆகக் கூடியது ரூபா 5,000,000/- |
| 14 | அனர்த்தத்தினால் பகுதியளவு சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்கான கொடுப்பனவு | ஆகக் கூடியது 2,500,000/- வரை (சேத மதிப்பீன்படி) |
| 15 | அனர்த்தத்தினால் ஏற்பட்ட மரணத்தின் போது இறந்தவரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது முழுமையான அங்கவீனத்தின் போது உரிய நபருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு | நபர் ஒருவருக்கு ரூபா 1,000,000/- |

03. மேற்கண்ட நிவாரணக் கொடுப்பனவுகள் 2025-11-28 ஆந் திகதிய 2464/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரகடணப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகும்.

04. 2025-01-21 ஆந் திகதிய 01/2025 ஆம் இலக்க அனர்த்த நிவாரண சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை இல. 01 இன் (ii) இலிருந்து (x) வரையும், (xiii) மற்றும் (xiv) இலும் குறிப்பிடப்பட்ட நிவாரண வகைகளையும் செலுத்துவதை இந்த சுற்றறிக்கை தடுக்கமாட்டாது. இருப்பினும், அதே சுற்றறிக்கையின் அட்டவணை இல. 01 இன் (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள இறுதிச் சடங்குச் செலவுகளுக்கான ரூபா 50,000/- முன்பணம் தொடர்ந்து செலுத்தப்படலாம் என்பதுடன், இந்த சுற்றறிக்கையின் மேற்கண்ட அட்டவணையின் தொடர் இல. 15 இல் குறிப்பிடப்பட்ட, மரணத்தின் போது செலுத்தப்பட்ட தொகையிலிருந்து அது கழிக்கப்படமாட்டாது.

05. 2025 நவம்பர் 21 முதல் பிரகடனப்படுத்தப்பட்ட விரிவான அனர்த்த நிலைமை காரணமாக சேதமடைந்த வீடுகளை வசிப்பதற்கு ஏற்ற நிலைக்குக் கொண்டுவருவதற்கு ரூபா 25,000/- வழங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2025-12-02 ஆந் திகதிய NDRSC/02/04/10 ஆம் இலக்க "நவம்பர் 21 2025 முதல் பாரியளவில் ஏற்பட்ட விரிவான அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள்கட்டமைக்க ரூபா 25,000/- உதவித்தொகை வழங்குவது தொடர்பான வழிகாட்டல்" என்ற தலைப்பிலான கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 25,000/- கொடுப்பனவை ஏற்கனவே பெற்ற வீட்டு அலகுகளுக்கு இந்தச் சுற்றறிக்கையின் அட்டவணையின் தொடர் இல. 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவை திருப்பிச் செலுத்தக்கூடாது.

06. இந்த சுற்றறிக்கையின் அட்டவணையின் தொடர் இல. 1, 2, 3, 4, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 இன் கீழ் குறிப்பிடப்பட்ட நிவாரணங்களுக்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதிலும், சேதத்தை மதிப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2025-01-21 ஆந் திகதிய 01/2025 ஆம் இலக்க அனர்த்த நிவாரண சேவைகள் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

07. இந்த சுற்றறிக்கையின் அட்டவணையின் தொடர் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்ட பயிர் சேதத்திற்கு நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு, அரசாங்க நிதி மூலம் வழங்கப்படும் பயிர் சேதத்திற்கான வேறு எந்த சலுகைகளும் வழங்கப்படக்கூடாது.

08. இந்த சுற்றறிக்கையின் அட்டவணையின் தொடர் இல. 13 இன் கீழ் காணிக் கொள்வனவுக்காக கொடுப்பனவு வழங்கப்பட்டதன் பின்னர், அக்காணியினை உரிய முறையில் அரசாங்கத்திற்கு கைமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. நிவாரணம் வழங்கல் தொடர்பான பயனாளிகள் மற்றும் கொடுப்பனவுகள் குறித்த விவரங்கள் மற்றும் தரவுகளை முறையாகப் பராமரிப்பதை செயற்படுத்துகை நிறுவனங்கள் உறுதி செய்தல் வேண்டும்.

10. குறித்த வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் போது பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள செலவினை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்குத் தேவையான நிதியை திறைசேரி வழங்கும்.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
திறைசேரியின் செயலாளர்

பிரதி:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்

# வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதி ஏற்பாடுசெய்தல் மற்றும் செயற்படுத்தல்

| இல. | நிவாரணம் | கொடுப்பனவு | ஒதுக்கீட்டு செலவினத் தலைப்பு | செயற் படுத்தல் |
|---|---|---|---|---|
| 1 | அனர்த்த நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளை புனரமைத்து மீண்டும் பாதுகாப்பாக வாழ்வதற்கு வீட்டு உரிமையினைப் பார்க்காது வீடொன்றுக்கு ஒரு தடவை மாத்திரம் வழங்கும் கொடுப்பனவு | வீடொன்றுக்கு ரூபா 25,000/- | 103 – பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 2 | குடியிருப்பதற்கு தேவையான அத்தியவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வீடொன்றுக்கு ஒரு தடவை மாத்திரம் வழங்கும் கொடுப்பனவு | வீடொன்றுக்கு ரூபா 50,000/- | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 3 | தமது வாழ்வாதாரத்தினை இழந்த குடும்பத்தினருக்கு 03 மாதங்களுக்கு 2025 திசெம்பர் மற்றும் 2026 சனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு | உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 அல்லது அதற்குக் குறைந்த குடும்பங்களுக்கு ரூபா 25,000/-<br>உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 இற்கு அதிகமான குடும்பங்களுக்கு ரூபா 50,000/- | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 4 | அனர்த்தத்தினால் வீடுகளை இழந்து வாழ்வதற்கான வீடற்றவர்களுக்கு மாதாந்த வீட்டு வாடகைக் கொடுப்பனவு | ஆகக் கூடியது 06 மாதம்வரை மாதம் ரூபா 25,000/- | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 5 | அனர்த்தத்தினால் பாதிப்புற்ற நெல், தானியங்கள், சோளம் மற்றும் களப்பயிர் பயிர் நிலங்களின் அழிவு அல்லது மீளப் பயிர்ச் செய்கைக்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபா 150,000/- | 281- கமநல அபிவிருத்தித் திணைக்களம்<br>285 – கமத்தொழில் திணைக்களம் | கமநல அபிவிருத் தித் திணைக்க ளம் / கமத் தொழில் திணைக் களம் |
| 6 | அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மரக்கறி பயிர் நிலங்களின் அழிவு அல்லது மீளப் பயிர்ச் செய்கைக்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபா 200,000/- | 285 – கமத்தொழில் திணைக்களம் | கமத் தொழில் திணைக்க ளம் |

| இல. | நிவாரணம் | கொடுப்பனவு | ஒதுக்கீட்டு செலவினத் தலைப்பு | செயற் படுத்தல் |
|---|---|---|---|---|
| 7 | அனர்த்தத்தினால் பாதிப்புற்ற கால்நடை பராமரிப்புப் பண்ணைகளுக்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு (பதிவு செய்யப்பட்ட பண்ணை உரிமையாளர்களுக்கு மாத்திரம்) | பண்ணை உரிமையாளர் ஒருவருக்கு ரூபா 200,000/- | 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் |
| 8 | அனர்த்தத்தினால் பாதிப்புற்று நிறுத்தப்பட்டுள்ள தனியார், சிறிய மற்றும் நுண்நிதி தொழில் முயற்சிகளை மீள ஆரம்பிக்கப் பொருத்தமான நிலைக்குக் கொண்டுவர ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | அலகொன்றுக்கு ரூபா 200,000/- | கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்த தனியார், சிறிய மற்றும் நுண்நிதி தொழில் முயற்சிகளுக்கு - 149 - கைத்தொழில் அமைச்சு | பிரதேச செயலகம் |
| | | | ஏனைய பதிவு செய்த தனியார், சிறிய மற்றும் நுண்நிதி தொழில் முயற்சிகளுக்கு - 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 9 | அனர்த்தத்தினால் சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்காக நட்ட ஈடு வழங்கல் | படகு ஒன்றுக்காக ஆகக்கூடியது ரூபா 400,000/- வரை | 290 – கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம் | கடற் றொழில் நீரியியல் வளங்கள் திணைக்களம் |
| 10 | அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் மற்றும் ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | பாடசாலை மாணவர் ஒருவருக்கு ரூபா 15,000/- | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 11 | அனர்த்தத்தினால் சேதமடைந்த வணிக கட்டிடங்களுக்கு நட்ட ஈடு வழங்கல் | கட்டிடமொன்றுக்கு ஆகக் கூடியது ரூபா 5,000,000/- வரை நட்டஈடு (சேத மதிப்பீன்படி) | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 12 | அனர்த்தத்தினால் முழுமையாகச் சேதமடைந்த, குடியிருப்பதற்கு முடியாத வீடுகளுக்கு புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்காக கொடுப்பனவு வழங்கல் | வீடொன்றுக்கு ரூபா 5,000,000/- | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 13 | அனர்த்தத்தினால் குடியிருந்த வீடு முழுமையாக சேதமடைந்து புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தினால் காணி வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் பொருத்தமான காணி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு | வீடொன்றுக்கு ஆகக் கூடியது ரூபா 5,000,000/- | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |

| இல. | நிவாரணம் | கொடுப்பனவு | ஒதுக்கீட்டு செலவினத் தலைப்பு | செயற் படுத்தல் |
|---|---|---|---|---|
| 14 | அனர்த்தத்தினால் பகுதியளவு சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்கான கொடுப்பனவு | ஆகக் கூடியது 2,500,000/- வரை (சேத மதிப்பீன்படி) | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |
| 15 | அனர்த்தத்தினால் ஏற்பட்ட மரணத்தின் போது இறந்தவரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது முழுமையான அங்கவீனத்தின் போது உரிய நபருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு | நபர் ஒருவருக்கு ரூபா 1,000,000/- | 103 - பாதுகாப்பு அமைச்சு | பிரதேச செயலகம் |